006335

10 APR 2023

<u>பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்</u>

<u>மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் (FAC), சென்னை-6, அவர்களின்</u>

<u>செயல்முறை ஆணை</u>

<u>பிறப்பிப்பவர் : மரு.V.P. ஹரிசுந்தரி, எம்பிபிஎஸ்., டிபிஎச்.,</u>

ந.க.எண்.5414/நி8/1/2022 நாள்:24.03.2023

பொருள்: நிர்வாகம் – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு.ராநந்தகுமார், (த/பெ. (லேட்) திரு.பெராமமூர்த்தி, துப்புரவுப் பணியாளர், அரசு மருத்துவமனை, தாம்பரம், காஞ்சிபுரம் மாவட்டம்) – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியமர்த்தப்பட்டது – பணிவரன்முறை – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1) அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (கியூ1) துறை, நாள் 23.01.2020 மற்றும் அதன் தொடர்புடைய ஆணைகள்.
2) அரசு கடித எண்.8014/ஏடி2/2021-1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏடி2) துறை, நாள் 20.05.2021.
3) இவ்வியக்க கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.47676/நி8/1/2021, நாள் 30.09.2021.
4) இவ்வியக்கக பணியமர்த்தல் ஆணை ந.க.எண்.59030/நி2/2/2021, நாள் 05.10.2021.
5) சென்னை மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் கடித ந.க.எண்.2339/MRB/நி8/2021, நாள் 31.01.2022 மற்றும் 01.09.2022.

------

<u>ஆணை :</u>

காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம், அரசு மருத்துவமனையில் துப்புரவுப் பணியாளராகப் பணிபுரிந்து, பணியிலிருக்கும் போது 02.03.2010 அன்று இயற்கையெய்திய திரு.பெராமமூர்த்தி என்பவர் 13.10.1976 பிற்பகல் 12.10.1977 தகுதிகாண்பருவம் பணிவரன்முறைப்படுத்தப்பட்டு, அவரின் பிறந்த தேதி 20.10.1950, அவர் ஓய்வு பெற வேண்டிய நாள் 31.10.2010 ஆகும். இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரராகிய அவரது மகன் திரு.ராநந்தகுமார் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிவேண்டி உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார்.

Scanned with CamScanner

பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 24/2016)-ன்படி, காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம், அரசு மருத்துவமனையில் துப்புரவுப் பணியாளராகப் பணிபுரிந்து, பணியிலிருக்கும் போது 02.03.2010 அன்று இயற்கையெய்திய திரு.பெ.ராமமுர்த்தி என்பவரின் மகனும் வாரிசுதாரருமாகிய திரு.ரா.நந்தகுமார் (பிறந்த தேதி 11.06.1982) தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் ரூ.19500-62000/- நிலை 8 (Level-8) என்ற சம்பள முறையில் பார்வை-3இல் காணும் ஆணைப்படி பணிநியமனம் செய்யப்பட்டு, பார்வை-4இல் காணும் பணியமர்த்தல் ஆணைப்படி, சென்னை, மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தில் 08.10.2021 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

எனவே, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.ரா.நந்தகுமார் என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை பார்வை-1இல் காணும் அரசாணையின்படி அவர் பணியில் இணைந்த நாளான 08.10.2021 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னாரின் தற்காலிக பணியினை, பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை இருப்பின் அதைப்பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

V.P. ஹரிசுந்தரி,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்
இயக்குநர் (FAC)

பெறுநர்
திரு.ரா.நந்தகுமார்,
இளநிலை உதவியாளர்,
மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், சென்னை
-- சென்னை மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், மூலமாக.

நகல்
1) மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், சென்னை -6.
2) நலப்பணிகள் இணை இயக்குநர், காஞ்சிபுரம்.
3) நிர்வாகப்பிரிவு - 2.
4) இருப்புக்கோப்பு / உபரி -1.

உண்மை நகல் // அனுப்பப்படுகிறது //

இணை இயக்குநர் (நிர்வாகம்)

3/4/23 6/3/4

Scanned with CamScanner